திரு. ரா. ரா. முனுசாமி : தற்போது இல்லை என்று சொன்னார்கள் ஆனால் பொது மக்களும், பார்வையாளர்களும், மற்ற மாநிலங்களில் இருந்து சாத்தனூர் டாமைப் பார்க்க வருகிறவர்களும் தங்குவதற்கு இட வசதி இல்லை. எனவே அதை உத்தேசித்து அத்திட்டத்தில் அதைச் சேர்க்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சாத்தனூர் பகுதியில் அணைக்கட்டு விடுதி ஒன்று ஏற்கெனவே இருக்கிறது. விருந்தினர் விடுதிகள் மூன்று உள்ளன. இவையில்லாமல் சீர் செய்யாத விடுதிகளும் இருக்கின்றன. ஆகவே, தற்போது கட்டவேண்டிய அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

*225 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மாயூரம் நகரில் பொதுப்பணித்துறையின் சார்பில் பயணிகள் விடுதி ஒன்று கட்டப்பட்டு வருகின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

*226 வினா—திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையத்தில் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை கட்டுவது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மேட்டுப்பாளையத்தில் கூடுதலா பொதுப் பணித்துறை ஆய்வு மாளிகை கட்டுவதற்கான செயற் குறிப்பு அரசின் கவனிப்பில் உள்ளது.

Assignment of land in Arcotkuppam.

*227 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that lands were given to "Anna Anbu Illam" and "Kalaignar Karunanidhi Kai Thozhil Koodam" in Arcotkuppam village, Tiruttani taluk; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ), (இ). "கலைஞர் கருணாநிதி தொழில் கூடம்" என்ற பெயரில் சங்கமெதுவும் இல்லை ; அதற்கு நிலம் எதுவும் கொடுக்கப்படவுமில்லை.

1974 சனவரி 29]

திரு. ஆ. பரந்தாமன் : திருத்தணி வட்டத்தில் ஆர்க்காடு குப்பத்தில் அறிஞர் அண்ணா இல்லம், கலைஞர் கருணாநிதி கைத்தொழில்கூடம் இவற்றிற்கு இப்போது பொதுப் பணித் துறை அமைச்சராக இருக்கக்கூடிய அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அந்தக் குழு மாவட்ட ஆட்சியாளரிடம் பத்து எக்கர் நிலம் கோரினார்கள். அவர்கள் மூன்று எக்கர்கள்தான் இப்போது கொடுத்திருக்கிறார்கள். இந்தக் குழு கோருகிற அந்த பத்து எக்கர் நிலத்தையும் கொடுக்கவேண்டுமென்று அரசு மாவட்ட ஆட்சியாளருக்கு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அறிஞர் அண்ணா அனாதை இல்லம் என்று ஒன்று இருக்கிறது. அதற்கு பத்து எக்கர் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்த நிறுவனம் செயல்படத் துவங்கவில்லை. ஆகவே இப்போது ஒரு எக்கர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலைகள் துவங்கிய பிறகு மற்ற நிலங்களைக் கொடுக்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரைத்திருக்கிறார்கள். சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்த இடம் கொடுக்கப்படும்.

திருமதி. ஜோதி வெங்கடாசலம் : இந்த அண்ணா அன்பு இல்லத்தில் என்னென்ன தொழில்கள் செய்வதற்கு அவர்கள் கேட்டிருக்கிறார்கள் ? அந்தத் தொழில்கள் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என்னென்ன தொழில்கள் என்ற விவரம் என்னிடம் இப்போது இல்லை. கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டுக் கொடுக்கலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள்:—

அனாதை இல்லமும் தொழில் கூடமும் நடத்த மட்டுமே அந்நிலத்தைப் பயன்படுத்த வேண்டும்; வேறெந்தக் காரியத்திற்கும் அந்நிலத்தைப் பயன்படுத்தக் கூடாது.

மாவட்ட ஆட்சித் தலைவர் நிலம் வழங்கிய நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் மேற்படி நிலம் அனாதை இல்லம் தொடங்கப் பயன்படுத்தப்பட வேண்டும். பயிர் செய்வதோ கற்களை வெட்டியெடுப்பதோ கூடாது.

விண்ணப்பதாரர், அரசின் முன் அனுமதியின்றி, மேற்படி நிலத்தின் எந்த ஒரு பகுதியையும் உரிமை மாற்றம் செய்யவோ குத்தகைக்கு விடவோ கூடாது.

நிபந்தனை மீறல் எதுவும் நடந்தால், நிலம் வழங்கியது ரத்து செய்யப்பட்டு இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்படாமலேயே அந்த நிலத்தின் சுவாதீனம் அரசால் எடுத்துக்கொள்ளப்படும். அவ்வாறு மேற்சொன்ன நிலத்தை அரசே மீண்டும் எடுத்துக்கொள்ளும் நிலையில், அந்நிலத்திலுள்ள கட்டுமானங்கள் அனைத்தும் அரசுக்கே முழுமையாகச் சொந்தமாகும்.